DEPOSITION OF WITNESS

(Chapter XXV BNSS)

**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE NO.I,MANNARGUDI**

CC.No. 208/2022 P.W.1 இந்தராகாந்தி த/பெ.திருஞானம்

*நாள் 02.04.2026*

BNSS பிரிவு 348 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டதின் பேரில் அசா.1 திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

1ம் எதிரி ஆஜர். 2வது எதிரி தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

ராஜசேகரன் வீட்டிற்கு அருகில் சத்தியராமன் மாடிவீடு இன்னும் சுமார் 6,7 வீடுகள் இருக்கும். அதில் தயாள் ராமன் வீடு என்பது எங்கள் வீட்டில் இருந்து 3 வது வீடு. அவர் எங்களது உறவினர் வீடு. அவர் பெரியப்பா மகன். அவருக்கும், எதிரிகளுக்கும் பேச்சுவார்த்தை இல்லை என்றால் சரிதான். மற்ற வீட்டினர் எங்களுக்கு விரோதிகள் அல்ல என்றால் சரிதான்.

நீதிமன்ற விசாரணையில் சாட்சியங்கள் அளிப்பது எனக்கு ஒன்றும் புதியதல்ல என்றால் ஓரளவுக்கு நீதிமன்ற அனுபவம் உண்டு. பட்டியல் சாட்சி 3 இளவரசிஎனது சகோதரி. அவருக்கும், எதிரிக்கும் பேச்சுவார்த்தை கிடையாது. விரோதம் உண்டு. பட்டியல் சாடசி 4 தமிழ்செல்வி தயாள்ராமனின் மனைவி. வழக்கு சம்பந்தமாக முதன் முறையாக போலீசார் என்னை எந்த தேதியில் எத்தனை மணிக்கு எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் என்னை மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். சம்பவத்துக்கு மறுநாள் என்னை விசாரித்தார்கள். சம்பவத்தன்று எனக்கு உடல்நிலை சரியில்லாததால் அதற்கு மறுநாள் வந்து விசாரித்தார்கள். எத்தனை மணிக்கு வந்து விசாரித்தார்கள் என்றால் காலை 10,11 மணிக்கு விசாரித்தார்கள். சொல்ல சொல்ல எழுதிக்கொண்டார்கள். அ தில் என்னிடம் கையொப்பம் வாங்கி கொண்டார்கள். நான் எத்தனை பேப்பரில் கையெழுத்து போட்டேன் என்றால் ஒரு பேப்பரில் கையெழுத்து போட்டேன். அதன் பிறகு எத்தனை முறை விசாரித்தார்கள் என்றால் விசாரிக்கவில்லை. வந்து பார்த்து செல்வார்கள்.

முதல் விசாரணையில் சாட்சியம் அளித்துள்ள இடது கையில் வெட்டியதாக சொல்லப்படும் காயத்தை மருத்துவரிடம் காண்பித்தேனா என்றால் காண்பித்தேன். எனது ஊரில் இருந்து மன்னார்குடிக்கு ஏறத்தாழ எத்தனை கிமீ இருக்கும் என்றால் ஏறத்தாழ 14, 15 கிமீ இருக்கும். இருச்சக்கர வாகனத்தில் வந்தால் சுமார் 1/2 மணி நேரத்தில் மன்னார்குடிக்கு வந்துவிடலாம் என்றால் சரிதான். தமிழ்செல்வி என்னை 108 ஆம்புலென்சு மூலம் மன்னார்குடிக்கு வந்து சேர்த்தார் என்றால் சரிதான்.

மருத்துவரிடம் நான் சென்ற போது சுயநினைவுடன் இருந்தேனா என்றால் சுயநினைவில் இல்லை. மறுநாள் தான் சுயநினைவு திரும்பியது. மருத்துவரிடம் எல்லா விபரமும் என் கூட வந்த தமிழ்செல்விதான் சொன்னது. உடன் இளவரசி, தயாள்ராம் கூட இருந்தார்கள். ராஜசேகர் வீட்டிற்கு கீழ்புறத்தில் தென்தோப்பு உள்ளது என்றால் சரிதான். மேற்படி தென்னந்தோப்பு மற்றும் விவசாய நிலங்களில் 1 வது எதிரி விவசாயம் செய்து வருகிறார் என்றால் சரிதான். அதில் எனக்கு பங்கு தரவிலலை என்று எனக்கு எனது சகோதரர் சேதுராமன், இளவரசி, தமிழ்செல்வி ஆகியோர்க்கும் 1 வது எதிரிக்கும் வருத்தம் என்றால் சரிதான். எனது அம்மா சந்திராவும் தற்போது இறந்துவிட்டார்.

தென்னந்தோப்பில் என் வீடு உள்ளது என்றால் சரிதான். அதில் தான் தென்னந்தோப்பிற்கு போகும் மோட்டார் பம்புசெட் ஸ்விட்ச் உள்ளது என்றால் சரிதான். நாங்கள் குடியிருந்தது போர்செட். இந்த வழக்கிற்கு முன்பாகவே சொத்து சம்பந்தமாக 6,7 முறை நடந்துள்ளது என்றால் 15 வருடங்களாக லதா வந்த பிறகு பிரச்சனை இருந்து வருகிறது. மேற்படி சங்கதிகள் வழக்கிற்காக தற்போது தவறாக புகுத்துகிறேன் என்றால் சரியல்ல.

ஆஜர் 1 வது எதிரி தான் மூத்த சகோதரர் என்றால் சரிதான். எனக்கு 2008 ல் திருமணம் நடைபெற்றது. திருமணத்தின் போது எங்கள் குடும்ப பூர்விக சொத்தை 2 1/2 ஏக்கரை எங்கள் ஊரை சேர்ந்த சிவசுந்தரம் என்பவரிடம் விற்கப்பட்டது என்றும், அது எனது பங்கிற்காக சீராக வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. எனது திருமணம் 2008, பூர்விக சொத்து விற்கப்பட்டது 2009 அது குடும்ப கடனுக்காக விற்கப்பட்டது. அது 2 1/2 ஏக்கர் கிடையாது 1 3/4 ஏக்கர். (5 மா நிலம்).

அதே போன்று இளவரசி திருமணத்தின் போது சிவசுந்தரத்திடம் 1 ஏக்கர் நிலம் விற்கப்பட்டது என்றால் சரியல்ல. இளவரசிக்கு எனது அம்மா இறந்த பிறகு 5

ஆண்டுகளுக்கு முன்பாக தான் திருமணம் நடைபெற்றது. எனது சகோதரர் சேதுராமனும் 1 ஏக்கர் நிலத்தை பாலையனிடம் விறக்கப்பட்டதா என்றால் குடும்ப கடனுக்காக 1வது எதிரி பஞ்சாயத்தார் மூலம் வித்ததில் நான் கையெழுத்து போட்டோம். அதுவும் எனது அம்மா இறந்த பிறகு தான். மேற்படி நிலங்கள் பத்திர பதிவு செய்யப்பட்டது என்றும், அதில் எனது சகோதரர் சகோதரிகள் தாயார் சாட்சி கையெழுத்து போட்டோம் என்றால் பாலையனிடம் விற்றபோது எனது அம்மா கையெழுத்துபோடவில்லை. அவர் இறந்து விட்டார். சிவசுந்தரத்திடம் விற்றபோது கையொழுத்து போட்டுக்கொடுத்தார். பஞ்சாயத்தார்கள் கட்டாயத்தின் பேரில் கையெழுத்து போட்டுக்கொடுத்தோம்.

நான் எனது சகோதரர் சகோதரிகள் எங்களுக்கு ஒதுக்கப்பட்ட பங்கை விற்பனை செய்து விட்டு மேலும், கூடுதலாக எதிரியிடம் இருந்து பங்கு பெறவேண்டும் என்பதற்காகவே எதிரி மீது தவறான வழக்கை ஜோடித்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த எதிரிகள் எந்த தருணத்திலும் ஆபாசமாக திட்டவும் இல்லை என்றாலும், அரிவாளால் வெட்டவில்லை என்றாலும், எனக்கு கொலை மிரட்டல் விடுக்கவில்லை என்றால் சரியல்ல. சம்பவ நாளில் நாங்கள் தான் வலிய வம்பிற்கு சென்றோம் என்றும், எதிரிகள் தங்களது நிலத்தில் விவசாயம் செய்யகூடாது என்பதற்காகவே மோட்டார் ஸ்விட்ச் போடக்கூடாது என்பதற்காக என்னால் பிரச்சனை துவங்கப்பட்டது என்றாலும் மோட்டார் ரூமை சாத்த முற்பட்ட போது எனக்கு ஏற்பட்ட காயத்தை மறைத்து எதிரிகள் என்னை தாக்கியதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. Sd/--J. Tamizhmurugan,

Judicial Magistrate No.I,

Mannargudi.